பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**17 10 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

**1.** தில்லியில் போராட்டத்தின்போது தேசியக் கொடியை பயன்படுத்தியதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு பிஜேபி கண்டனம் தெரிவித்துள்ளது.

**2.** காற்று மாசின் தரத்தை கண்காணிப்பதற்கான மையங்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

**3.** நாட்டின் விண்வெளி பொருளாதாரம் அடுத்த எட்டு ஆண்டுகளில் **4** ஆயிரத்து **500** கோடி டாலரை எட்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**4.** பங்களாதேஷில் கடற்கரை சுற்றுலா விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் **10** பேர் உயிரிழந்தனர்.

**5.** சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dhakshineswar Suresh — Manish Suresh Kumar** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>

தில்லியில் போராட்டத்தின்போது தேசியக் கொடியை பயன்படுத்தியதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு பிஜேபி கண்டனம் தெரிவித்துள்ளது.

பீகார் தலைநகர் பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி தலைவர் திரு நிதின் நபின், தலைநகர் தில்லியில் சட்டம் — ஒழுங்கை சீர்குலைக்க அனுமதிக்க முடியாது என்று தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சி, மக்கள் நலன் உள்ளிட்டவைக்கு முன்னுரிமை அளிப்பதற்கு பதிலாக எதிர்க்கட்சியினர் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதாக அவர் கூறினார்.

தில்லியில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் நாட்டின் அரசியல் சாசனத்திற்கும், அரசியல் சாசன அமைப்புகளுக்கும் மதிப்பளிக்கவில்லை என்று திரு நிதின் நபின் குறை கூறினார்.

<<<<<>>>>>>

தேர்தல் ஆணையம் குறித்து தவறான கருத்துகளை எதிர்க்கட்சியினர் பரப்பி வருவதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் போபாலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ் கட்சியினர் பொய்யான தகவல்களை தெரிவித்து வருவதாக குற்றம் சாட்டினார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கு முன்பாகவே காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தேர்தலில் தோல்வியடைந்ததாக அவர் கூறினார்.

<<<<<>>>>>>

காற்று மாசின் தரத்தை கண்காணிப்பதற்கான மையங்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாசு ஏற்படுத்தாத வாகனங்களை பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தொழில்நுட்ப புத்தாக்க நிறுவனங்களும், அரசு அதிகாரிகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பயிர் கழிவுகள், கட்டுமானக் கழிவுகளை அறிவியல் ரீதியாக அழிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

காற்று மாசை கட்டுப்படுத்துவதற்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் திரு புபேந்தர் யாதவ் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

நாட்டின் விண்வெளி பொருளாதாரம் அடுத்த எட்டு ஆண்டுகளில் 4 ஆயிரத்து 500 கோடி டாலரை எட்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் Bloomberg பொருளாதார மாநாட்டில் பேசிய அவர், இந்தியா உலக அளவில் போட்டித் தன்மைவாய்ந்த வர்த்தக விண்வெளி நிறுவனங்களை உருவாக்க வேண்டும் என்று கூறினார்.

விண்வெளித்துறையில் அதிக முதலீடுகளை ஈர்க்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் திட்டங்கள் மூலம் விண்வெளித்துறையில் தனியார் பங்களிப்பு அதிகரித்துள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<>>>>>>

ஸ்வீடன் நாட்டு நிறுவனங்கள் ஹரியானாவில் 4 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்ய உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி தெரிவித்துள்ளார்.

சண்டிகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன்மூலம், 11 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று தெரிவித்தார்.

தமது ஸ்வீடன் நாட்டு பயணத்தின்போது முதலீடுகளை ஈர்க்க நடவடிக்கை மேற்கொண்டதாகவும் திரு நயாப் சிங் சைனி கூறினார்.

<<<<<>>>>>>

குஜராத் மாநிலத்தில் ரசாயன தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

**Bharuch** மாவட்டத்தில் ஏற்பட்ட இந்த விபத்து காரணமாக நச்சு வாயு வெளியேறியது.

இதனையடுத்து அந்த தொழிற்சாலையில் பணியாற்றியவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

இந்த விபத்து குறித்து காவல்துறை விசாரணை மேற்கொண்டு வருகிறது.

<<<<<>>>>>>

மக்கள் நலனே தேசத்தின் நலன் என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

நீடித்த வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

இதுதொடர்பான சிறப்பு தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது பிரதமரின் **Gati Shati** திட்டம்.

***(Voice Over — 70 Sec.)***

*கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பிரதமரின் **Gati Shati** திட்டம் கடந்த **2021** ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.*

*தேசிய அளவில் தொடங்கப்பட்ட இந்த திட்டம், கட்டமைப்புத் துறையில் புரட்சிகரமான மாற்றங்கள் கொண்டு வரப்பட்டது.*

*நாட்டின் **16** முக்கிய துறைகளின் திட்டங்களை ஒன்றிணைத்து, கட்டமைப்பு திட்டங்களை ஒருங்கிணைக்க இது வழிவகை செய்துள்ளது.*

*பிரதமரின் **Gati Shati** திட்டம் **100** லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான கட்டமைப்பு திட்டங்களை வடிவமைத்துள்ளது. நெடுஞ்சாலைகள், ரயில்வே, துறைமுகம், விமான நிலையங்கள், மின் பகிர்மானம் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு வசதிகளை இத்திட்டம் ஒருங்கிணைத்துள்ளது.*

*இதன் மூலம் கட்டமைப்பிற்கான செலவினங்களை ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் **14** சதவீத்தில் இருந்து **8** சதவீதமாக தற்போது குறைக்கப்பட்டுள்ளது.*

*வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட இந்த திட்டம் வழிவகை செய்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.*

*பிரதமரின் **Gati Shati** திட்டம் பல்வேறு கட்டமைப்புகளை ஒருங்கிணைத்து நாட்டை வளர்ச்சிப்பாதையில் கொண்டு சென்றுள்ளதாக அவர் கூறியுள்ளார்.*

*<<<<<>>>>>>*

பங்களாதேஷில் கடற்கரை சுற்றுலா விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் **10** பேர் உயிரிழந்தனர்.

**Cox Bazar** மாவட்டத்தில் ஏற்பட்ட விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த **6** பேர் உட்பட **10** பேர் உயிரிழந்ததாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மரத்தினால் கட்டடப்பட்ட இந்த மூன்று மாடி விடுதியில் தீப்பிடித்து விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விடுதியில் **30** பேர் தங்கியிருந்தனர்.

இதில் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

<<<<<>>>>>>

சவுதி அரேபியாவின் **Jeddah, Riyadh, Dammam** விமான நிலையங்களுக்கு அனைத்து விமான சேவைகளையும் வரும் **24-**ஆம் தேதிவரை ரத்து செய்யப்படுவதாக ஏர் இண்டியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

வரும் **25-**ஆம் தேதிவரை ஏர் இண்டியா எக்ஸ்பிரஸ் விமானங்களில் முன்பதிவு செய்துள்ள பயணிகள் அடுத்த மாதம் **10-**

ஆம் தேதிக்குள் மாற்றுப் பயணம் மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ரத்து செய்யப்பட்ட விமான சேவைகள் பயணியர் கட்டணத்தை முழுமையாக திரும்பப் பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

உணவு பாதுகாப்பில் பின்தங்கியுள்ள 10 நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தான் இடம்பெற்றுள்ளதாக சர்வதேச மனிதநேய அமைப்பு கூறியுள்ளது.

இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், அதிகரித்துவரும் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்வால் இந்நாடுகளில் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

இந்நாடுகளில் உள்ள மக்கள் ஏழ்மை நிலையில் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சூடான், ஏமன் உள்ளிட்ட 10 நாடுகளில் 17 கோடியே 70 லட்சம் மக்கள் உணவு இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

கேரளம் மாநிலத்தின் திருவனந்தபுரம், மலப்புரம், கோழிக்கோடு. வயநாடு, கன்னூர் மாவட்டங்களில் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கொல்லம், ஏர்ணாகுளம் உள்ளிட்ட ஒன்பது மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

மணிக்கு **50** கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கேரளம், கர்நாடகா, லட்சத்தீவு கடல்பகுதிகளில் அடுத்த **24** மணிநேரத்திற்கு மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dhakshineswar Suresh — Manish Suresh Kumar** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை **6-3, 6-4** என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Adil Kalyanpur —** ஜப்பானின் **Ryuki Natsuda** இணையை வென்றது.

-------------

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையே பெங்களூருவில் இன்று நடைபெறவிருந்த ஐந்தாவது மற்றும் இறுதி டுவென்ட்டி-டுவென்ட்டி கிரிக்கெட் போட்டி மழை காரணமாக தாமதமாகியுள்ளது.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில், சென்னை அணி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

முன்னதாக, லக்னோவில் நடைபெற்ற ஒடிஷா - காசி அணிகளுக்கு இடையேயான ஆட்டம் **1-1** என்ற கோல் கணக்கில் டிராவில் முடிவடைந்தது.

------------

துனிஷியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaishnavi Adkar** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<END>>>>>>**